# *பணிநிறைவு வாழ்த்து!*

## திருமதி தைலாம்பாள் அனந்த கிருஷ்ணன்

**நாள்: 30-07-2022**



நாற்பது ஆண்டுகள் நலமுடன்,
பணிசெய்தே மகிழ்ந்து;
அற்புத கீர்த்தி பலவும்,
அழகுடனே பெற்று நிறைந்து,
சொற்பதம் நிறைந்த சொற்களால்,
சொந்தமாய் நட்பை வளர்த்து,
பற்பலரும் போற்றும் பெருமை,
பாங்குடனே பெற்ற எங்கள்,

அன்பின்சீர் தோழி **தைலாம்பாள்**
அழகுடன் கண்ட பணிநிறைவு!
மன்னரும் மக்களும் மகிழ்ந்திட,
அமைச்சராய் ஆற்றல் செய்து,
பொன்குணப் பொறுமை யென்ற,
பொலிவுடன் திகழ்ந்திருந்தார்!
தென்னகம் போற்றும் எங்கள்,
சுங்கம்போல் திகழ்ந்து வாழியவே!

இனிவரும் காலம் தன்னில்,
இனியதாம் சீர்இல்லறத்துள்;
நனிசீர் மணாள னோடும்,
மக்களோடும் அன்பில் திளைந்து,
கனிவுடன் வாழ வேண்டும்!
பிணியில்லா நலமும் கொண்டே!
அணியதாய் அன்பின் தூவல்,
அளிப்பவன் இறைவன் தானே!



அன்புடன்,
**கு.ப. அசோகன்**
30-07-2022 (11.30 PM)